முருகப்பெருமான் துணை

**மகான் பேயாழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**11.06.2021**, வெள்ளிக்கிழமை

1. அருட்கடலாக வந்த ஞானியே
அன்னதான சேவை ஆற்றி
இருள் போக்கும் மாதவசியே
ஏழாம்படை வீட்டின் யோகியே

2. யோகியே ஆறுமுக அரங்கனே
உலகினில் உன் பெருமை கூறி
அகிலமதில் யோகபிரசன்ன ஆசி
அறிவிப்பேன் பிலவ விடை திங்கள்

3. திங்களிலே எழுநான்குதிகதி புகர்வாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 28ம் நாள், 11.06.2021 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு பேயாழ்வார் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார ஞானவழி காட்டும் அரங்கன்

4. அரங்கன் திருவடி பணிந்து
ஆற்றல் மிக்க சன்மார்க்கத்தை
வரங்களாக ஏற்று மக்கள்
வணங்கியே தொடர்ந்து வர

5. வருகவே மாற்றம் தானும்
வளர்ச்சியாக கடைத் தேற்றமாக
முருகப் பெருமான் அருளாசிபட
முழுமைபட அடைந்து தேறுவர்

6. தேறவே மக்களின் செயல்களை
தெய்வ அம்சமாக மாற்றி
கூறவே காரியவெற்றி சித்தியென
குறைவிலா மக்கள்அடைந்து

7. அடைந்து ஆக்கம் பெறுவர்
ஆன்மீக ஞான பூமிக்கான
தடையிலா மாற்றம் கண்டு
தரணியில் அற்புதம் நிகழும்

8. நிகழவே இந்தவித சக்தியாக
நிலமதனில் முருகப் பெருமான்
மகத்துவமிக்க அரங்க ஞானியை
மண்ணுலகில் அவதாரமாக படைத்து இருக்க

9. இருக்கவே பிரணவக் குடிலும்
ஏழாம்படைவீட்டு சக்தியாக
கருத்தாக உருவாக்கப் பட்டிருக்க
கலியுகத்தார் அனுகி வந்து வழிபட்டு

10. வழிபட்டுமே அரங்க மகானை
வல்லமைபட குருவாய் ஏற்று
அழியாமை ஞானம் பயின்றுவர
அரங்கன் வழி ஆறுமுகனை கண்டு

11. கண்டுமே மேன்மை அடைவர்
கலியிடரை வென்றும் தேறுவர்
தொண்டர்களாகி உலகோர்
தேசிகனால் ஞானிகள் ஆவர்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–